**Minutes of the Public Hearing Meeting held on 03.05.2011 at 03.30 P.M. at Collectorate, Palayamkottai Road, Korampallam, Thoothukudi District for the proposed expansion of 2 x 800 MW coal based Thermal Power Plant within the existing 2 x 600 MW Plant Premises by M/s. Coastal Energen Private Limited at Melamaruthur Village, Ottapidaram Taluk, Thoothukudi District.**

**Present :-**

1. Thiru. Durai. Ravichandran,
   District Revenue Officier,
   Thoothukudi.

2. Thiru. M. Murugan,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Thoothukudi.

3. Thiru. T.S. Kumaravel,
   Assistant Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Thoothukudi.

**The list of participants is enclosed in the Annexure**

District Revenue Officer, Thoothukudi District welcomed the public and requested the project proponent to explain about the proposed project.

Project Proponent Thiru. N K Balaji, Vice President, M/s, Coastal Energen Private Limited made a detailed presentation of the proposed project as follows.

Coastal Energen private Limited proposes to expand its present capacity of power generation within the complex of its existing plant at Melamaruthur Village, Ottapidaram Taluk, Thoothukudi District, Tamil Nadu. The unit is installing 2 x 600 MW power plant. Now it has proposed to install additionally a more advanced super critical technology based 2 x 800MW power plant within the existing premises to have least impact on the environment and proposed to use a mix of imported/domestic coal. The annual coal requirement will be 5.88 Million Tonnes. The coal will be unloaded at Tuticorin Port, and proposes to transport by Rail from Tuticorin Port via Melathattaparai Railway Junction. There exist a railway line from Tuticorin Port to Melathattaparai Railway Junction. A new railway line will be laid from Melathattaparai Railway Junction to the Plant Site, which is 18 Kms away from it. The Indian Railways has in principle accepted the proposal and planning of laying the railway line is in progress and also exploring the possibility of establishing a coal jetty. The Sulphur content of the imported/domestic coal will not be more than 0.6% at the maximum. The ash content in the imported coal will be 12% (Maximum) and that in domestic Coal will be 34% (maximum). The coal will be unloaded in

underground hoppers and conveyed through closed conveyors to the coal storage yard. The coal storage yard will be provided with water sprinklers. The total area earmarked for coal storage will be 199 Acres upon expansion. The total plant area is 1050 acres, which is totally owned by the unit.

The unit has proposed to install a twin flue single stack of 275 metres for the proposed 2 x 800MW supercritical power plant in addition to the existing twin flue single stack of 275 metres height for 2 x 600MW . There will be 2- additional Electro static preceptors (ESP) i.e one each for the each boiler for the proposed 2 x 800MW super critical plant to meet the permissible norms of less than 50mg/Ncu.m. The unit also proposed to install a similar ESP for the present 2 x 600MW Power plant under construction. It is also proposed to install defoggers at all transfer points, crushers, pulverisors etc as was proposed for the present plant under construction to have negligible fugitive emissions. The fly ash will be collected in dry form in the silos and unloaded directly to closed trucks for sending it to cement plants. The bottom ash will be disposed to ash dyke, for which 80 Acres has already been exclusively earmarked in the earlier 2 x 600MW proposal. No additional land is proposed for the expansion plan.

The unit has proposed to source sea water to meet all the plant requirements including main condensate cooling, auxiliary cooling, boiler feed make up, service water requirements and domestic requirements. The sea water will be directly used to meet the entire cooling water requirements. However, a separate desalination plant is under construction in the existing 2 x 600MW to meet all the requirements other than cooling water make up. The cooling water blow down along with desalinated rejects will be discharged back to sea. CRZ clearance for the sea water intake and discharge of cooling water blow along with desalinated rejects has already been obtained from Ministry of Environment and Forest, Government of India, New Delhi for the present 2 x 600MW Power Plant. The total sea water intake upon expansion will be 35,000 cu.m/hr, and the sea water discharge upon expansion for cooling water blow down alongwith desalinated rejects will be 28,000 cu.m/hr.

The unit had also elaborated on extensive scheme adopted for green belt development. Of the total land of 1050 Acres, about 350 Acres has been exclusively earmarked for green belt development. The unit had in detail presented the various activities implemented to ensure wholesome green belt. The unit had shown photographs of the green house, nurseries, plantation areas, etc established within the site to grow saplings for which the unit had specifically engaged M/s BHARATH VIKAS GROUP a renowned Green belt specialist from Pune to develop and maintain green belt and had already planted 12,616 Nos. of avenue, medium and tall trees at of the total 65000 trees proposed. The unit had also shown extensive pictures of the green plant already implemented and in progress.

The unit had also elaborated on groups commitment to the Enterprise Social Responsibility and informed that there will be direct employment of 750 nos apart from indirect employment of 3500 nos. The unit had also elaborated and shown photographs on the various community centers, medical centers, schools etc constructed already. Also told about assistance being provided to local school children’s in the form of uniforms, books, tables, chairs etc provided. The unit had also been providing Gas Stoves and Cylinders etc to local villages. The unit had also

elaborated on the proposed education facility, vocational training proposed, water supply to nearby villages, public health improvement etc.

The District Revenue Officer requested the public to express their opinion about the proposed project.

**<u>Public – 1 Thiru. Krishnamoorthy, Tamil Nadu Toilers Assoication, Thoothukudi.</u>**

He raised an issue on the conduct of public hearing when the moral code of conduct is in force. The scheme and proposal explained seems to propagate a government proposals where it seems to tell about a particular government activity.

**<u>Public 2. Thiru K. Nehru Prakash, General Secretary, Thoothukudi District Small Scale Industries Association, Thoothukudi.</u>**

Thoothukudi is in the southern part of India and neglected of development. They need development here so that people will get employment . Last week they had a meeting with their office bearers, wherein they had talked of power shortage and decided to obtain power directly from private producers. Discussed that if this power plant does not come up then they have to go to other states for establishing industries. He stressed that atleast 25% of ash is to be allotted to small scale units and requested establishing of cluster for fly ash based units. The stretch of land between Thoothukudi to Ramanathapuram is of dry place all aquaculture land established earlier shall be utilized for establishing Thermal Power plants in future. He also expressed his anxiety over commissioning of the power plants because many industrial projects will be developed in Thoothukudi District.

**<u>Public 3 Mr.Kanagaraj, Communist Party of India (Marxist)</u>**

He said that the consumption of such huge quantity of coal will definitely constitute to SO2 emission in Thoothukudi area. In the Executive summary, coal handling is not clearly stated. Some where in EIA, it was mentioned that through Railway sliding it will be transported to the unit. Whereas in other pages, a coal jetty is proposed. So, the unit has to clarify its stand on coal transport.

He questioned the air quality status in Thoothukudi because, even by considering the transportation loss @ 0.3%. So many thousand tones of coal will be spilled along the transport route and affecting the entire air quality.

He also raised the sea water drawal and disposal issue. In the EIA, it was mentioned that there will not be any damage to the marine eco system because of discharge of condenser cooling blow down with R.O. reject. How it is feasible the same quality of water will be discharged.

He complained that the unit has acquired more than enough lands for its projects and because of opposition from the local public and intervention of the Revenue Department, the canal passing through site was left un touched and lined with stone. The unscientific disposal of food wastes in the area, had caused the death of cattles of nearby village (A.M. Patti)

He concluded that the company has to maintain the environment in good condition, otherwise he opposed the setting up of expansion.

**Public -4 Raja Sankaralingam, General Secretary, All India Chamber of Commerce and Industries, Thoothukudi.**

Welcomed the setting up such power projects to get out of power shortage problems.

**Public- 5 Mr. Mohanraj, (Communist Party of India) Secretary, Thoothukudi District.**

He said that even the installation of the 2 x 600 MW is yet to be completed. But the unit has gone for expansion. How can we allow this expansion. We do not know the damage from the earlier one. He complained that the unit has acquired poor man's land and not settled their claim till date and said that even the unit has encroached upon the cremation yard of nearby village. The setting up such huge activity, handling large quantity of coal and fly ash will affect the salt activity to a great extent and opposed the setting up of these expansion activity.

**Public- 6 – Joe Villavarayar, Representing Confederation of Indian Industries.**

He has welcomed the coming up of such power projects to promote development in Thoothukudi.

**Public- 7 – Thiru. Dhanabalan, General Secretary, Thoothukudi Small Scale Salt Producers Association**

**He said that he is not against the project in general, however**

- He outlined that salt pan activity is existing for more than 5 decades in 1600 acres of lands.
- Due to setting of such projects, native occupations get affected.
- Already, salt pans in Thoothukudi along transport way are affected due to coal dust, fly ash and truck movements.
- So, establishing of such huge projects along coastal area will affect our traditional salt and agricultural activity.
- He stressed that District Administration and Government consider their issues and there after permit such industries.

**Public- 8 Thiru. Johnson, Fisherman's Association, Thoothukudi.**

He said that all Red category units mostly power plants are being set up in Thoothukudi. Government permits large industries for sea water drawal and effluent discharge into sea, whereas not allowing fishermen to carryout fishing activity.

- Moreover, Government machineries are not equipped to meet out any major industries accidents and explosions in Thoothukudi.

- They are already affected by condenser cooling and ash disposal of Tuticorin Thermal Power Station and apposed the setting up such thermal power projects.

**Public- 9 – Thiru. Karuppasamy, Ex-President, Melamaruthur village Panchayat**

- He said that the unit has encroached small pond, canal and cremation yard. Only after moving to Hon'ble High Court of Chennai, Madurai Bench, they have refurbished the public utilities.
- So, they are vehemently opposing the coming up of this project.

**Public- 10 – Thiru. Pushparayan, Co-ordinator, Coastal People's Federation.**

He claimed that the public hearing is an eye wash. Model code of conduct is still in force and government refuses to accept public grievances citing model code of conduct, but conduct public hearing. He raised questions about the source of

investment by the company. When fishermen are restricted from fishing, the government permits large industries to discharge their effluent into sea.

He also complained about the venue in which the meeting was conducted because of less seating capacity and discrepancies in the Executive summary about the distance of project site from the Gulf of Mannar Marine Bio-Reserve. No clarity in coal handling. So, they opposed the setting up of this power plant.

**Public- 11 – Thiru S. Jeyaraj, Ex-President, Vallinayagapuram village.**

They have hailed the coming up of this project, because it will boost economic growth and provides employment opportunity to the local youth.

**Public- 12 _ Tmt. A. Kamatchi, President, Vallinayagapuram village Panchayat.**

They have hailed the coming up of this project, because it will boost economic growth and provides employment opportunity to the local youth.

**Public- 13 – Antony Anandaraj, Union Councilor**

He hailed the setting of this power project provided it does not affect the environment.

**Public- 14 :- Thiru Arputharaj, Taruvaikulam.**

Since the coming up of such units will affect their livelihood and other resources, they oppose the setting up of this project.

**Public- 15 :- Thiru Jeyabal, President, Tharuviakulam Village Panchayat**

People need power but at same time it should not affect us. They requested that the unit should construct hospital to take care of local people. At present, people drink sea water, and hence requested to supply clean drinking water. Let power plant be constructed but it should not affect our environment and sought the intervention of fisheries Department to rule out apprehension about industries effluent disposal on sea.

**Public- 16 :- Thiru. Paulraj, Tharuvaikulam**

They welcome the project and said that the unit is already doing a lot, however requested to provide good hospital and drinking water.

**Public- 17 – Thiru. Kanagarja, Puthia Tamilagam Party**

He complained that the unit is drawing from their resources water. The unit has earlier blocked the canal and raised doubt about the possibility of discharge of effluent through this canal to sea.

**Public- 18 : Thiru. Dharman, NGO, Thoothukudi.**

He hailed the setting up of this project.

**Public- 19 : Thiru. Francis, Tharuvaikulam.**

A resident of Taruvaikulam hailed the setting up of this project because this will improve the living conditions of local people.

**Public- 20 : Thiru. Kennedy , NGO, Thoothukudi.**

He said that coming up of this type of projects will pave way for development of Nation and Thoothukudi District in particular.

**Public- 21 :- Thiru. George Comez, Democratic Fishermen Community**

He complained about the absence of officials from Salt, Fisheries Department to clarify people's apprehension. It is not a democratic hearing. He stated that the leachate from Thermal Power Plant ash contains Mercury and affects marine life. He opposed the setting up of this project.

**Public- 22 : Thiru. Arumuganainar, Melamaruthur.**

A native of nearby village hailed the coming up of this project.

**District Revenue Officer, Thoothukudi District.**

At the end, District Revenue Officer thanked all for registered their suggestions / opinion about the proposed project. He informed the public that permission to conduct the public hearing has already been obtained from State Election Commission and notification about the date of conduct of this public hearing has also been published in local and English daily (Daily Thanthi & Indian Express dated 02.04.2011). What ever the request / complaints of public, are voiced here will be taken care.

The District Revenue Officer declared the Public Hearing as concluded and certified that the process followed for public hearing was adequate.

The District Environmental Engineer thanked all the public.

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

District Revenue Officer,
THOOTHUKUDI.

**03.05.2011 அன்று மாலை 03.30 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தின் குறிப்புகள் (Minutes) – திட்டம் 2 x 800 MW நிலக்கரியை அடிப்படையாக கொண்ட அனல் மின் நிலையம் தற்பொழுது கட்டப்பட்டு வரும் 2 x 600 MW வளாகத்திற்குள் தி/ள். கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மேலமருதூர் கிராமம், ஓட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.**

**பங்கேற்றவர்கள்**

1. திரு. துரை. இரவிச்சந்திரன்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   தூத்துக்குடி.

2. திரு. மெ. முருகன்,
   மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   தூத்துக்குடி.

3. திரு. த.ச. குமாரவேல்,
   உதவி சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   தூத்துக்குடி.

**கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் குறித்த விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.**

மாவட்ட வருவாய் அலுவலர் கூட்டத்திற்கு வருகை தந்த பொதுமக்கள், தொழிலதிபர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்துக் கேட்டுணர்வு கூட்டத்தின் அவசியத்தை விவரமாக எடுத்துரைத்தார்.

விரிவாக்கம் செய்யவுள்ள 2 x 800 MW அனல் மின் நிலையம் பற்றிய முழு விவரங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்க தொழிற்சாலை அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

திரு. N.K. பாலாஜி, உப தலைவர், தி/ள் கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிட் இத்திட்டம் பற்றிய விவரங்களை பொதுமக்களுக்கு நிழற் படங்கள் மூலம் விவரமாக எடுத்துரைத்தார். நிறுவப்படவுள்ள 2 x 800 MW அனல் மின் நிலையம் தற்பொழுது கட்டப்பட்டு வரும் 2 x 600 MW அனல் நிலைய வளாகத்திற்குள் அமையவுள்ளது.

இந்த அனல் மின் நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு 5.88 மில்லியன் நிலக்கரி எரிபொருளாக பயன்படுத்தப்படவுள்ளது. இந்த நிலக்கரி முழுவதும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து மேலதட்டப்பாறை இரயில் நிலையம் வழியாக கொண்டு வரப்படவுள்ளது.

உபயோகப்படுத்தப்படவுள்ள நிலக்கரியில் கந்தகத்தின் அளவு அதிகபட்சமாக 0.6 விழுக்காடும் சாம்பல் அதிகபட்சமாக 34 விழுக்காடும் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. நிலக்கரி முழுவதும் பூமிக்கடியில் அமையவுள்ள கிடங்குளில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து மூடிய கன்வெயர் மூலமாக எடுத்துச்செல்லப்படும். நிலக்கரி கிடங்கில் தண்ணீர் தெளிப்பான் அமைத்து துகள்கள் பராவ வண்ணம் தடுக்கப்படவுள்ளது. இந்த நிலக்கரி கிடங்கு சுமார் 199 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது.

மின் உற்பத்தியின் போது வெளியாகும் வாயுக்கழிவுகள் 275 மீ உயரமுள்ள புகைபோக்கி மூலம் வெளியேற்றப்படவுள்ளது. காற்றில் துகள்கள் பரவாவண்ணம் எலக்ட்ரோ ஸ்டேட்டிக்

பிரிஸிபிடேட்டர் நிறுவப்படவுள்ளது. தொழிற்சாலைக்கு தேவையான நீர் முழுவதும் கடலிருந்து எடுக்கப்படவுள்ளது. குளிருட்டப்பட்ட நீர் மற்றும் சவ்வூடு வடிப்பானிலிருந்து வெளியேறும் உப்பு நீருடன் கலந்து மீண்டும் கடலிலேயே கலக்கப்படும். கடலிருந்து எடுக்கப்படும் நீரின் அளவு மணிக்கு 35,000/— கன மீட்டர் ஆகும். கடலில் கலக்கப்படும் நீரின் அளவு மணிக்கு 28,000/— கன மீட்டர் ஆகும். தொழிற்சாலை அமையவுள்ள 1050 ஏக்கரில் சுமார் 325 ஏக்கர் பசுமைப்போர்வைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பசுமைப்போர்வை ஏற்படுத்துவதற்கான பணிகளை பிரபல நிறுவனமான பாரத் விகாஸ் குருப், மும்பை—யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கட்டப்பட்டு வரும் தொழிற்சாலை வளாகத்திற்குள் இதுவரை 12,500/— மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் சுமார் 65,000 மரங்கள் வளர்க்கப்படவுள்ளன. அமையவுள்ள அனல் மின் நிலையத்தினால் சுமார் 750 பேருக்கு நேரிடையாகவும், 3500 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அமையப்படவுள்ள நிறுவனம் அருகில் உள்ள சமுதாயக் கூடங்கள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை நிறுவப்பட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அருகில் வசிக்கும் மக்களுக்கு எரிவாயு அடுப்பு, கேஸ் இணைப்பு ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்கள் இத்திட்டம் பற்றி தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கீழ்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. கிருஷ்ணமூர்த்தி, உடல் உழைப்போர் சங்கம், தூத்துக்குடி.**

இவர் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருக்கும்பொழுது இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்புரை நடத்தப்படலாமா? என வினா எழுப்பினார். மேலும் இத்திட்டம் அரசின் கொள்கைகளை விளக்குவதாக உள்ளது என தெரிவித்தார்.

**2. திரு. கே. நேருபிரகாஷ், பொதுச் செயலாளர், தூத்துக்குடி சிறுதொழில் உற்பத்தியாளர்கள் சங்கம்**

இந்தியாவின் தென்பகுதியில் தூத்துக்குடி அமைந்துள்ளது. அதனால் இதன் வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் இப்பகுதியில் அபிவிருத்தி பணிகள் நடைபெற்றால் இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். கடந்த வாரம் நடைபெற்ற நிர்வாக கமிட்டி கூட்டத்தில் மின் பற்றாக்குளை பற்றி விவாதிக்கப்பட்டது. மேலும் தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து தொழிற்சாலைக்கு தேவையான மின்சாரத்தை வாங்க தீர்மானிக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் மின்பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலைகள் வெளிமாநிலங்களுக்கு சென்றடைய வாய்ப்புள்ளது என்று கூறினார்.

இந்த அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் சாம்பல் கழிவுகளில் 25% சாம்பல் செங்கல் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்கூடங்களுக்கு வழங்க வேண்டும் என்றும், தூத்துக்குடி முதல் ராமநாதபுரம் வரை உள்ள இடங்கள் வறட்சி நிலமாக இருப்பதால் மீன் பண்ணைகள் ஆரம்பித்த இடங்களில் அனல் மின் நிலையங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் கூறினார்.

இத்தொழிற்சாலையின் உற்பத்தி தொடங்க உள்ள நேரத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும், இது போன்ற அனல் மின் நிலையங்கள் மேலும் நிறுவப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**3. திரு. கே. கனகராஜ், மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்)**

இந்த அனல் மின் நிலையத்தில் அதிகளவு நிலக்கரி எரிபொருளாக பயன்படுத்தப்படவுள்ளதால் காற்றில் சல்பர் டை ஆக்ஸைடு அளவு அதிகமாக இருக்கும் என்றும் மேலும் திட்ட விளக்கவுரையில் நிலக்கரி கையாளப்படக்கூடிய விதம் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றும் கூறினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் நிலக்கரி, ரயில்வே மூலம் கொண்டுவரப்படவுள்ளதாகவும், மற்றொரு பக்கத்தில் கடலில் நிலக்கரி தளம் அமைத்து கொண்டு செல்லப்படப்போவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்பற்றி விளக்கம் அளிக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நிலக்கரி, லாரிகள் மூலம் கொண்டுவரப்படும்பொழுது ரோடு ஓரங்களில் கொட்டும் நிலக்கரியினால் காற்று மாசு அடைய வாய்ப்புள்ளது என்று கூறினார்.

இத்திட்டத்திற்கு தேவையான நீர் கடலிலிருந்து எடுக்கப்பட்டு குளிருட்டப்பட்ட நீர் மீண்டும் கடலில் விடப்படுவதாகவும், இதனால் கடல்வாழ் உயிரினங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியம் என்றும் வினா எழுப்பினார். இத்தொழிற்சாலைக்கு தேவையான நிலங்கள் தேவைக்கு அதிகமாக வாங்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களின் எதிர்ப்பினால் வருவாய் துறை அலுவலரின் தலையீட்டின் பேரில் தொழிற்சாலை வளாகத்திற்குள் செல்லும் ஓடை முழுவதும் பராமரிக்கப்பட்டுள்ளது என்றும், இத்தொழிற்சாலை உணவுக் கழிவுகளை விஞ்ஞான முறைப்படி கையாளத காரணத்தால் சமீபத்தில் A.M. பட்டி கிராமத்தில் ஆடு, மாடுகள் இறக்க நேரிட்டது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இவர் தன்னுடைய முடிவுரையில் இத்தொழிற்சாலை சுற்றுச்சூழலை நன்கு பராமரிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் இத்தொழிற்சாலை அமைவதை எதிர்ப்பதாக தெரிவித்தார்.

**4. திரு. ராஜா சங்கரலிங்கம், பொதுச் செயலாளர், அகில இந்திய வர்த்தக சங்கம், தூத்துக்குடி.**

தற்பொழுது நிலவி வரும் மின் பற்றாக்குறையை இது போன்ற மின் நிலையங்களால்தான் தீர்க்கப்பட முடியும் என்பதால் இத்திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

**5. திரு. மோகன்ராஜ், மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

தற்பொழுது நிறுவப்பட்டு வரும் 2 x 600 MW அனல் மின் நிலையம் நிறுவப்பட்டு வரும் நிலையில் மேலம் ஒரு விரிவாக்கத்திற்கு எவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டது என்றும், நிறுவப்பட்டு வரும் அனல் மின் நிலையத்தால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு எதுவும் தெரியாக நிலையில்உள்ளது. இந்நிறுவனம் எளியவர்களிடமிருந்து வாங்கி நிலத்திற்கான உரிய தொகையை இன்றும் கொடுக்கப்படவில்லை என்றும், அருகில் உள்ள சுடுகாட்டு நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளதாக தெரிவித்தார்.

இத்தொழிற்சாலை கையாளக்கூடிய அதிக அளவு நிலக்கரி மற்றும் சாம்பலினால் உப்பு உற்பத்தி அதிக அளவு பாதிக்கப்படும் என்பதால் இந்த விரிவாக்கத்தை எதிர்ப்பதாக தெரிவித்தார்.

**6. திரு. ஜோவில்வராயர், இந்திய தொழிற் கூட்டமைப்பு தலைவர், தூத்துக்குடி.**

இது போன்ற மின் நிலையங்களால்தான் தூத்துக்குடி நகரம் அபிவிருத்தி அடையும் என்றும், மேலும் இத்திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**7. திரு. தனபாலன், தலைவர், சிறிய உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம், தூத்துக்குடி.**

இவர், பொதுவாக இது போன்ற திட்டங்களை எதிர்ப்பது இல்லை என்றும், தொழிற்சாலை அமையவுள்ள இடத்தைச் சுற்றிலும் சுமார் 1600 ஏக்கர் பரப்பளவு நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி செய்யப்படுவதாகவும் கூறினார். இது போன்ற திட்டங்களினால் பரம்பரை உப்பு தொழில் பாதிப்படைவதாக தெரிவித்தார். தூத்துக்குடியில் இயங்கி வரும் உப்பளங்கள் நிலக்கரி, சாம்பல் மற்றும் வாகன போக்குவரத்தினால் பாதிப்படைவதாகவும் கூறினார். இது குறித்து அரசும், மாவட்ட நிர்வாகமும் ஒரு முடிவெடுத்து அதன் பின்னர் இது போன்ற தொழிற்சாலைக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**8. திரு. ம. ஜான்சன், செயலாளர், நாட்டுப்படகு மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கம், தூத்துக்குடி**

இவர் சிவப்பு நிறத் தொழிற்சாலைகள், குறிப்பாக அனல் மின் நிலையங்கள் தூத்துக்குடிக்கு அதிக அளவு நிறுவப்பட்டு வருவதாக தெரிவித்தார். அரசாங்கம் பெரிய தொழிற்சாலைகளுக்கு, கடலில் இருந்து நீரை எடுப்பதற்கும், தொழிற்சாலை கழிவு நீரினை கடலில் கலப்பதற்கும் அனுமதி வழங்கி வருகிறது. ஆனால் மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. மேலும், அரசு இயந்திரங்கள் மிகப் பெரிய அளவில் தொழிற்சாலை விபத்துக்கள் நடக்கும் பொழுது போதிய உபகரணங்கள் இல்லாமல் உள்ளது. ஏற்கனவே செயல்பட்டு வரும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரினாலும்,

சாம்பல் கழிவுகளாலும் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்து வருவதாக தெரிவித்தார். ஆகவே இத்திட்டத்தை தான் எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

**9. திரு. கருப்பசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், மேலமருதூர்**

இத்தொழிற்சாலை சிறு குளங்கள், வாய்க்கால்கள், சுடுகாடு ஆகியவற்றை ஆக்ரமித்து இருப்பதால், சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையின் தலையீட்டின் பேரில் அவைகள் பொது பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இத்திட்டத்தை எதிர்ப்பதாக கூறினார்.

**10. திரு. எம். புஷ்பராயன், கடல் தொழிலாளர் மக்கள் கூட்டமைப்பு, தூத்துக்குடி.**

இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்டுணர்வு கூட்டம் ஒரு கண்துடைப்பு என்றும், தேர்தல் விதிமுறைகள் அமலில் இருக்கும் பொழுது, அரசாங்கம் பொதுமக்கள் குறைகளை கேட்பதை கூட தவிர்த்து வரும் வேளையில் இந்தக் கூட்டம் நடைபெறும் அவசியம் என்ன என்று வினா எழுப்பினார். மேலும் இத்திட்டத்திற்கான முதலீடு பற்றியும் வினா எழுப்பினார்.

மீன்பிடித் தொழிலுக்கு, அரசாங்கம் விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்தி வரும் நிலையில், இது போன்ற பெரிய தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை கடலில் செலுத்த அனுமதி அளித்துள்ளது. மேலும் இக்கூட்டம் நடைபெறும் இடம் போதியதாக இல்லை என்றும், திட்ட செயலாகத்தில் மன்னார் வளைகுடா பாதுகாப்பு கோளத்திலிருந்து, திட்டம் அமைய உள்ள தூரம் முரன்பாடாக உள்ளது என்றும், நிலக்கரி கையாளப்படக்கூடிய விதம், சரியாக குறிப்பிடாத காரணத்தாலும் இத்திட்டத்தை எதிர்ப்பதாகவும் கூறினார்.

**11. திரு. ஜெயராஜ், முன்னாள் தலைவர், வள்ளிநாயகபுரம் பஞ்சாயத்து**

இத்திட்டம், இப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கும், இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு பெரும் என்ற காரணத்தினால் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**12. திருமதி. காமாட்சி, தலைவர், வள்ளிநாயகபுரம் பஞ்சாயத்து**

இத்திட்டம், இப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கும், இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு பெரும் என்ற காரணத்தினால் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**13. திரு. அந்தோணி ஆனந்தராஜ், யூனியன் கவுன்சிலர்**

இவர் இத்திட்டத்தை வரவேற்பதாகவும், இதனால் சுற்றுச் சூழல் பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

**14. திரு. அற்புதராஜ், தருவைகுளம்**

இது போன்ற திட்டங்களினால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் இத்திட்டத்தை எதிர்ப்பதாக கூறினார்.

**15. திரு. ஜெயபால், தருவைகுளம் பஞ்சாயத்து தலைவர்**

பொதுமக்களுக்கு மின்சாரம் தேவைப்படுவதாகவும், அதே நேரத்தில் அத்திட்டத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் திட்டம் அமையவேண்டும் என்று கூறினார். தற்சமயம் பொதுமக்கள் கடல் நீரை குடித்து வருவதாகவும், ஆதலால் இந்நிறுவனம், பொதுமக்களுக்கு தேவையான குடிநீரை வழங்க வேண்டும் என்றும் கூறினார். மீன்வளத்துறை, தொழிற்சாலையிலிருந்து கடலில் கலக்கும் கழிவு நீரினால் கடல் வளம் பாதிக்காமல் இருப்பதற்கு உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

**16. திரு. பால்ராஜ், தருவைகுளம்**

இத்தொழிற்சாலை பொதுமக்களுக்கு அதிக அளவில் உதவிகள் செய்து வருவதாகவும், இருந்த போதிலும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீரை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**17. திரு. கனகராஜ், புதிய தமிழகம், ஓட்டப்பிடாரம்**

இவர், இந்நிறுவனத்திற்கு தேவையான நீர் தங்களுடைய நீர் ஆதாரத்திலிருந்து எடுப்பதாகவும், இத்தொழிற்சாலை ஓடையை மறித்து கட்டப்பட்டுள்ளதால், தொழிற்சாலைக் கழிவு நீர் அதன் வழியாக கடலில் கலக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

**18. திரு. தர்மர், அரசு நலச் சங்கம், தூத்துக்குடி**

இவர், இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**19. திரு. பிரான்சிஸ், சமூக ஆர்வலர், தருவைகுளம்**

இவர், உள்ளூர் மக்களின் வாழ்க்கைத்தரம் இத்திட்டத்தினால் மேம்பட வாய்ப்புள்ளதால் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

**20. திரு. கென்னடி, அரசு நலச் சங்கம், தூத்துக்குடி**

இவர், தூத்துக்குடி மாவட்டத்திற்கும், நாட்டிற்கும் நன்மை தரக்கூடிய இந்த தொழிற்சாலை வரவேண்டும் என்று கூறினார்.

**21. திரு. ஜார்ஜ் கோமஸ், ஜனநாயக மீனவர் கூட்டமைப்பு**

இவர், உப்பு வளர்ப்புத்துறை அதிகாரிகள் மற்றும் மீன் வள அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாததால், பொதுமக்களின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்க இயலவில்லை. இக்கூட்டம் ஜனநாயக முறைப்படி நடத்தப்படவில்லை. தூத்துக்குடி தெர்மல் மின் நிலையத்திலிருந்து வெளியாகும் சாம்பலில் பாதரசம் இருப்பதாகவும், கடல் வாழ் உயிரினங்களுக்கு இதனால் பாதிக்கப்படுவதாகவும், ஆகவே இத்திட்டத்தை எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

**22. திரு. ஆறுமுக நயினார், மேலமருதூர்**

இவர், தொழிற்சாலையை அருகிலுள்ள பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த அனைவருக்கும் நன்றி கூறி இக்கூட்டம் நடத்துவதற்கு மாநில தேர்தல் ஆணையாளர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு மாதத்திற்கு முன்பாகவே, இது குறித்து தமிழ் நாளிதழ் தினத்தந்தி மற்றும் ஆங்கில தினசரியான இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களின் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவித்து, பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டம் முடிவுற்றது என்றும், இந்தக் கருத்து கேட்டுணர்வு கூட்டத்திற்கான வரைமுறைகள் போதுமான அளவில் பின்பற்றப்பட்டது என்றும் தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

மாவட்ட வருவாய் அலுவலர்,
தூத்துக்குடி.